**APPOLO STUDY CENTRE**

-SCHOOL OF COMPETITIVE EXAMS

# தலைப்பு : Group IIA, Group A, VAO பொதுத்தமிழ் படிப்பதற்கு தயாராகும் விதிமுறைகள்

**பொதுத்தமிழ்:**

இதற்க்கான பாடத்திட்டம் TNPSC குறிப்பிட்டுள்ளபடி

1. இலக்கணம்
2. இலக்கியம்
3. தமிழ் அறிஞர்களும், தொண்டுகளும்

**(அ) இலக்கணம்:**

1. மொத்தம் 20 துணை தலைப்புகள் உள்ளன.
2. இதிலிருந்து சராசரியாக 25 – 30 வினாக்கள் கேட்கப்படுகின்றன.
3. கேள்விகள் கேட்கப்படும் விதங்கள்
4. மூலங்கள் கீழ்கண்டவாறு

1. இலக்கண குறிப்பில் இருந்து குறைந்தது '5' வினாக்களாவது கேட்கப்படுகிறது.

எ.கா: வேர்ச்சொல், தொகை, பெயரெச்சம்

2. பொருள் தருகையில் இருந்தும் 4 – 5 வினாக்கள் கேட்கப்படுகிறது.
   எ.கா: திருக்குறள் கொடுத்து அதிலிருந்து பொருள் கோட்பது போன்ற வினாக்கள் (ம) பொருத்துக போன்றவை.

3. மீதமுள்ள 18 துணை தலைப்பில் இருந்தும் ஒவ்வொரு வினா கேட்கப்படுகிறது.

4. சில வினாக்கள் பாடத்திட்டத்தில் இல்லாமல் பள்ளி புத்தகத்தில் இருக்கும் வினாக்களும் கேட்கப்படுகிறது.

**எ.கா:**

1. அணிகள்
2. பா வகைகள்
3. பகுபத உறுப்பிலக்கணம்
4. அசை பிரித்து எழுதுதல்
5. பொருள் கோள்
6. தளைகள்
7. அசை பிரிப்பு (தேடா, புன்மா

**இலக்கணத்தை படிக்கும் விதம்:**

1. முதலில் பள்ளி புத்தகத்தில் உள்ள அனைத்து இலக்கணமும் தெரிந்திருக்க வேண்டும் (ம) புத்தகத்தில் குறிப்பிடபட்டுள்ள இலக்கண விதிமுறைகளையும் படித்துக் கொள்ள வேண்டும்.

2. அனைத்து பயிற்சி வினாக்களையும் கண்டிப்பாக நிரப்பி படிக்க வேண்டும்.

3. பள்ளி புத்தகம் 6 – 12 வரை கண்டிப்பாக படிக்க வேண்டும்.

4. அணிகள் படிக்கும் போது பள்ளி புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விதிகள் மற்றும் புத்தகத்தில் உள்ள திருக்குறள் அணிகள் மட்டும் படித்தால் போதுமானது.
5. பிரித்து எழுதுக. படிக்கும் போது புணர்ச்சி விதிகளை கண்டிப்பாக படிக்க வேண்டும்.

6. அனைத்தையும் படித்துவுடன் முடிவில் பண்ண வேண்டியது

    1. ஒரு நாள் ஒருதடவை ஒரு 50 வினாக்கள் பதில் அளித்து பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

    2. இதை தினமும் கடைப்பிடிக்க வேண்டிய முறையில் முக்கியமான ஒன்று.

    3. இந்த பயிற்சி கொண்டால் மட்டும் 30க்கு – 30 வினாக்கள் பதில் அளிக்க முடியும்

## TNPSC – வினாக்கள் கேட்கப்படும் விதம் - இலக்கணம்

1. இலக்கண விதிமுறைகளே கேள்வியாக கேட்கப்படுகிறது.

2. மேலும் "Statement wise" வினாக்களாக கேட்கப்படுகிறது.

3. இலக்கணம் மட்டும் தனிப்பிரிவாக கேட்காமல் அனைத்து வினாக்களுடன் ஒருமித்து கேட்கப்படுகிறது.

(ஆ) இலக்கியம்:
1. இலக்கியத்தில் மொத்தம் '10' துணைதலைப்புகள் உள்ளன.

2. இதிலிருந்து 25 – 35 வினாக்கள் வரைக் கேட்கப்படுகிறது.

3. கேள்விகள் கேட்கப்படும் விதங்கள் (ம) மூலங்கள் கீழ்கண்டவாறு

    1. திருக்குறள் என்ற துணை தலைப்பில் இருந்து மட்டும் 5 வினாக்கள் கேட்கப்படுகிறது.

    2. எனது பள்ளி புத்தகத்தில் உள்ள திருக்குறள் போதுமானது மற்றும் படித்துக் கொள்வது நல்லது.

    3. பத்துப்பாட்டு, எட்டுதொகை, பதினென்கீழ்கணக்கு என்ற துணைத் தலைப்பில் இருந்து 10 – 15 வினாக்கள் கேட்கப்படுகிறது.

4. கம்பராமாயணம் என்ற துணை தலைப்பில் இருந்து 1 வினா

5. ஐம்பெருங்காப்பியம், ஐச்சிறுகாப்பியத்தில் இருந்து 5 – 8 வினாக்கள்

6. சிற்றிலிக்கியத்திலிருந்து 10 வினாக்கள்

7. புராணங்களிலிருந்து 5 – 7 வினாக்கள்

8. சமய முன்னோடிகள் என்ற துணை தலைப்பில் இருந்து 5 வினாக்கள்

9. சித்தர் என்ற தலைப்பில் இருந்து 1 வினா கேட்கப்படுகிறது.

4. சில வினாக்கள் பாடத்திட்டத்தில் இருக்கும் ஆனால் பாடத்திட்டத்தில் இருக்காது. இந்த வினாக்கள் பற்றி தே.வி.ரா போன்ற புத்தகத்தில் இருந்து படித்து கொள்ள வேண்டும்.

எ.கா: 1. பதினென்கீழ் கணக்கில் களவழி நாற்பது, கைந்நிலை போன்றவை
2. சிற்றிலக்கியங்களில் பள்ளுவகை, அந்தாதி, சதகம், மடல் போன்றவை
3. புராணம், நாடகம் போன்ற கதை மாந்தர்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

| **இலக்கியத்தை** | **படிக்கும்** | **விதம்** |
|---|---|---|
| 1. 6 – 12 | பள்ளி புத்தகம் | நுனி இழை அளவில் படிக்க வேண்டும். |
| 2. மொழிதிறன் | பயிற்சியையும் | வாசித்து இருக்க வேண்டும் |
| 3. பயிற்சி | வினாக்களையும் | நிரப்பி படிக்க வேண்டும் |
| 4. ‘SHORT CUT” | முறையில் | படிக்க வேண்டும் |

எ.கா: ஐங்குறுநூறு – தொகுத்தவர் கூடலூர்கிழார்
தொகுப்பித்தவர் யானைக் கடசேய் மாந்தரத்சேரல் இரும்பொதை

படிக்கும் முறை – “500 ரூபாய்க்கு புரோட்டோ வாங்கி
கூடையில் எடுத்திட்டு போய் சாப்பிட்டு
யானை மாதிரி ஆயிட்டன்”

முடிவில் கடப்பிடிக்க வேண்டியது

1. தினமும் 25 வினாக்கள் பயிற்சி மேற்க்கொள்ள வேண்டும்
2. “SHORT CUT” முறையை தினம் மூன்று வேளை சொல்லி பார்க்க வேண்டும்.

(இ) தமிழ் அறிஞர்களும் தமிழ் தொண்டும்

1. இதில் மொத்தம் ‘20’ துணை தலைப்புகள் உள்ளன.
2. இதிலிருந்து 37 – 43 வினாக்கள் வரை கேட்கப்படுகின்றன.

APOLLO STUDY CENTRE

3. இந்த வினாக்கள் 90% பள்ளி புத்தகத்தில் இருந்தும், 10% இதர வெளி புத்தகத்தில் இருந்தும் கேட்கப்படுகிறது.
4. பாரதி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி, திருவிக, உ.வெ.சா. என்ற தலைப்பில் இருந்து 4- 5 வினாக்கள் கேட்கப்படுகிறது.
5. மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, நாவல், இதழ் போன்ற தலைப்பில் இருந்து 12 – 15 வினாக்கள் கேட்கப்படுகிறது.
6. நுணுக்கமான புத்தக வாசிப்பில் இருந்து 10 – 12 வினாக்கள் கேட்கப்படுகிறது.
7. மற்ற துணை தலைப்பில் இருந்து ஒவ்வொரு வினா கேட்கப்படுகிறது.

**தமிழ் அறிஞர்களும் தொண்டும் படிக்கும் விதம்:**

1. 6 – 12 பள்ளி புத்தகம் மிக நுணுக்கமான முறையில் படிக்க வேண்டும்
2. 10% வெளி புத்தகத்தில் இருந்து படிக்க வேண்டியது
   எ.கா: பள்ளி புத்தத்தில் குறிப்பிட்டுள்ள அத்தனை அறிஞர்கள் பற்றியும் வெளி புத்தகத்தில் இருந்து படிக்க வேண்டும். அதாவது “பிரபஞ்சன்” என பள்ளி புத்தகத்தில் இருக்கும் ஆனால் அவர் எழுதிய நூல்கள் பள்ளி புத்தகத்தில் இராது, எனவே இவரை பற்றி வெளி புத்தகத்தில் இருந்து படித்து கொள்ள வேண்டும்.
3. 11 – 12-ம் வகுப்பு உரைநடை பகுதியில் இருந்து ‘2’ வினாக்கள் கேட்கபடுகிறது. எனவே ஒருதடவை வாசித்துக் கொள்ள வேண்டும்.
4. அறிஞர்கள் பற்றி படிக்கும்போதும் “SHORT CUT” முறையில் படித்தால் மட்டுமே நியாபகம் வைக்க முடியும்.
   எ.கா: “அகல் விளக்கு” நூலின் ஆசிரியர் - மு. வரததாசனார்
   படிக்கும் போது விளக்கு தொடங்குகிறது.
   முட்டாமல் வா என படிக்கவேண்டும்.

**முடிவில் கடைபிடிக்க வேண்டியது**

1. தினமும் 25 வினாக்கள் பயிற்சி மேற்க்கொள்ள வேண்டும்
2. “SHORT CUT” தினம் மூன்று வேளை சொல்லி பார்க்க வேண்டும்

படிக்க வேண்டிய கால அளவு

1. மொத்தம் 15 மணி நேரம்
2. 5 மணி நேரம் - Language
3. 2 மணி நேரம் - செய்தித்தாள் (நடப்பு நிகழ்ச்சி)
4. 2 மணி நேரம் - இதர பாடங்கள்
5. 1 மணி நேரம் - 100 questions test

**வெற்றியை நிர்ணயிக்கும் உக்திகள்:**

1. 100 வினாக்கள் - Language
2. 25 வினாக்கள் - கணிதம்

3. 20 – 25 வினாக்கள் - நடப்பு நிகழ்வுகள்
இதில் 145 – 148 / 150 எடுக்க வேண்டும்
4. மீதமுள்ள பாடங்களில் 30 – 35 போட்டால் வெற்றி உங்கள் கையில்

**JOIN US TO JOIN THE PRESTIGIOUS STATE SERVICES**

**Further Details Contact**

# APPOLO STUDY CENTRE

**25, Nandhi Loop Street, West C.I.T.NAGAR,**
**Chennai-600035.**
**(Near: T.Nagar Bus Stand, Landmark: Nandhi Statue)**
**Email:** enquiryatappolo@gmail.com
appolosupport.com, www.appolotraining.com
**www.appolo.pbworks.com**
**PH: 24339436, 42867555, 9840226187, 9789918859**